DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.358 /2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-6 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சமயமுத்து |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.ஐயாதுரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 24.09.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பாலைகுடியில் குடியிருந்து மீன்பிடி தொழில்செய்து வருகிறேன். ஆஜர்எ திரி எனது ஊரை சேர்ந்தவர். எனது அண்ணன் மகள் ஸ்ரீஜா திருப்பாலைக்குடியில் உள்ள மருத்துவமனையில் உள்ள மருந்தகத்தில் வேலைக்கு சென்று வரும்போது ஆஜர் எதிரி தன்னை காதலிக்குமாறு எனது அண்ணன் மகள் ஸ்ரீஜாவிடம் தொந்தரவு செய்துள்ளார்.

2 நாங்கள் ஸ்ரீஜாவை வேலைக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டோம். பின்னர் ஆர்எஸ் மங்கலத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு ஸ்ரீஜா வேலைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது பழங்கோட்டை பேருந்து நிறுத்தத்திலிருந்து இறங்கி எங்களது ஊருக்கு வரும்போது ஆஜர்எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துகொண்டு ஆஜர் எதிரி தன்னை காதலிக்குமாறு மீண்டும் எனது அண்ணன் மகள் ஸ்ரீஜாவிடம் தொந்தரவு செய்துள்ளார். மேலும் ஆஜர் எதிரி ஊரிலுள்ள சின்ன சின்ன பையன்களிடம் ஆஜர் எதிரியை காதலிக்குமாறு சொல்லிவிட்டு எனது அண்ணன் மகள் ஸ்ரீஜாவை தொந்தரவு செய்துள்ளார்.

3. நாங்கள் மீண்டும் ஸ்ரீஜாவை வேலைக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டோம். பின்னர் ராமநாதபுரத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு ஸ்ரீஜா வேலைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது பழங்கோட்டை பேருந்து நிறுத்தத்திலிருந்து இறங்கி எங்களது ஊருக்கு வரும்போது ஆஜர்எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துகொண்டு ஆஜர் எதிரி ஸ்ரீஜாவை வண்டியால் இடிப்பது போல் சென்று தன்னை காதலிக்குமாறு மீண்டும் ஸ்ரீஜாவிடம் தொந்தரவு செய்துள்ளார். பின்னர் எனது அண்ணன் மனைவி மகாலட்சுமி எனது மனைவி வசந்தராணியிடம் ஆஜர்எதிரியின் பெற்றோரிடமும் சென்று ஆஜர் எதிரியின் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்குமாறு கூறியுள்ளார். எனது மனைவி ஆஜர்எதிரியின் பெற்றோரிடம் சொன்னபோது நாங்கள் சொன்னால் கேட்கமாட்டார் என்றும் நீங்களே ஆஜர் எதிரியிடம்பேசுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

4. பின்னர் 2022 வருடம் 6 வது மாதம் ஒரு நாள் எனது மனைவி ஆஜர்எதிரியிடம் சென்று ஸ்ரீஜாவின் தொந்தரவு செய்யவேண்டாம் என்று சொல்லியும் கேட்காததால் திருவாடானை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஸ்ரீஜா ஆஜர்எதிரி மீது புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நானும் ஆஜர்எதிரியும் ஒரே ஊரை சாந்தவர்ள் என்றால் சரிதான். எனது வீடும் ஆஜ ர்எ திரியின் வீடும் சுமார் 10,20 வீடுகள் தள்ளி இருக்கும். நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள தகவல்கள் அனைத்தும் எனக்கு எப்படி

தெரியும் என்றால் ஸ்ரீஜா எனதுமனைவியிடம் நடந்தவற்றை குறித்து தெரிவித்துள்ளார். எனது மனைவி என்னிடம் தெரிவித்தார். வழக்கு சம்பவத்திற்கு முன்பதாகவே ஆஜர் எதிரி எனது அண்ணன் மகளை கேலி கிண்டல் செய்து தொந்தரவு செய்ததாக தெரிவித்துள்ளேன். மேற்படி வழக்கு சம்பத்திற்கு முன்னதாக ஆஜர் எதிரியை குறித்து புகார்ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது அண்ணன் மகளின் நலன் கருதி புகார்கொடுக்கவில்லை.

2. இவ்வழகது சம்பவத்திற்கு முன்னதாகவே கடந்த 17.06.2022 நான் எனது மனைவி எனது அண்ணன் மற்றும் அண்ணன் மனைவி சென்று ஆஜர்எதிரியை தாக்கியதாக திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் இருந்துவருகிறது என்றால் வழக்கு இருக்கிறது ஆனால் அது வழக்கு சம்பவத்திற்கு முன் நடந்தது இ்ல்லை அதற்கு பின் நடந்தது ஆகும். இவ்வழக்கின் புகார் மனுவை புகார்தாரர் எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 24.06.2022 தேதி புகார்கொடுத்தார்.

3. இவ்வழக்கு புகார் மனு கொடுததற்கு முன்பதாகவே ஆஜர்எதிரியை நாங்கள் தாக்கியதாக எங்கள் மீது புகார்கொடுத்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும்அதனை மனதில்வைத்துகொண்டு தான் அதற்கு பின் புகார்தாரர் எதிரி மீது இப்புகாரினை கொடுத்தார்என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் அருகில் எந்த பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் திருப்பாலைக்குடி பேருந்து நிறுத்தம் உள்ளது. மேற்படி திருப்பாலைக்குடி பேருந்து நிறுத்தத்தில் இருந்து அரை கிலோமீட்டர் தொலைவில் தான் திருப்பாலைகுடி காவல்நிலையம்அமைந்துள்ளது என்றால் சரிதான். ராமநாதபுரத்திலிருந்தோ, ஆர்எஸ் மங்கலத்திலிருந்தோ வரும்போது மேற்படி திருப்பாலைகுடி பேருநது நிறுத்தத்தில் இறங்கி தான் எங்கள் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான்.

4.சம்பவம் ஆனது நடைபெற்ற அன்று சம்பவத்தை குறித்து திருப்பாலைகுடி காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவமானது உண்மையாகவே நடைபெற்றுஇருந்தால் திருப்பாலைகுடி காவல்நிலையம்சென்று தகவல் தெரிவித்து புகார் கொடுத்திருப்போம் என்றும் சம்பவமானது நடைபெறாததால் தான் திருப்பாலைகுடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவமானது நடைபெறவில்லை என்றும்எதிரிமீது பொய்யாக புகார்கொடுத்த அதற்கு நாங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.